*கவனிக்க.*- *20.03.2020 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2169 - 2020 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2020.03.27

*2169 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 966 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2020, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

965 - B82022 - 5403 (2020/03)

# நானாவித அறிவித்தல்கள்

## வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை

முச்சக்கர வண்டி தரிப்பிடங்களுக்கான கட்டணம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 148 ஆம் பிரிவின் கீழ் (1) வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையின் VCKPS/2020/02/23/433 ஆம் இலக்க 11.02.2020 ஆம் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தினுள் 2020 ஆம் ஆண்டு, I ஆம் நிரலில் குறிப்பிடப்படும் தரிப்பிடங்களில் சேவை வழங்குவதற்கும் II ஆம் நிரலில் குறிப்பிட்டிருக்கும் கட்டணங்களை 2020, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஆ. அந்தோனி,
தவிசாளர்,
வெங்கலச் செட்டி குளம்,
பிரதேச சபை.

*நிரல்* I

***முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள்***

1. செட்டிகுளம் பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக்கு முன்னால் - முகத்தான் குளம் 6 ஆம் குறுக்குத் தெருவுக்கு இடது பக்கத்தில் மதவாச்சி- மன்னார் பிரதான வீதியின் 10 m
2. செட்டிகுளம் பிரதேச செயலக பிரதான வாயிலிலிருந்து 20 m க்கு அப்பால் 10 m
3. செட்டிகுளம் மக்கள் வங்கிக்கு முன்னால் இடது பக்கமாக 5 m
4. செட்டிகுளம் சமுர்த்தி வங்கிக்கு முன்னால் இடதுபக்கமாக 5 m
5. ஆண்டியாபுளியங்குளம் - மன்னார்- மதவாச்சி பிரதான வீதிக்கு அண்மையில் 8 m அளவான தூரம்
6. மாங்குளம்- மருதமடு வீதியின் சந்தியிலிருந்து 20 m தூரம்
7. வீரபுரம்-நேரியகுளம்- வவுனியா பிரதான வீதியின் கப்பலேந்திய மாதா திருவுருவச்சிலை சந்தியிலிருந்து இடதுபக்கம் 10 m தூரம்
8. சூடுவெந்தபுலவு - பாடசாலையின் பிரதான நுழைவாயிலுக்கு வலது பக்கமாக வவுனியா-நேரியகுளம் பிரதான வீதியின் 10 m
9. முதலியார் குளம் - 3 ஆம் ஒழுங்கைக்கு இடது பக்கமாக கடைத்தொகுதிக்கு அப்பால் மதவாச்சி - மன்னார் பிரதான வீதியின் 10 m
10. பிரமணாலங்குளம்-வவுனியா-மன்னார் பிரதான வீதியின் பெரியதம்பனை சந்தியிலிருந்து வலது பக்கமாக 10 m

*நிரல்* II

1. முச்சக்கர வண்டி (நாள் ஒன்றுக்கு) -10.00

*3 - 908*